<u>சுருக்கம்</u>

சிலை அமைத்தல் – திருவள்ளூர் மாவட்டம்– திருவள்ளூர் நகராட்சி– திருவள்ளூர் நகராட்சி அலுவல வளாகத்திற்குள் பேரறிஞர் அண்ணா அவர்களின் மார்பளவிலான வெண்கலச் சிலையினை அமைக்க அனுமதி அளித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்ம் குடிநீர் வழங்கல் (நநி5) துறை

அரசாணை (நிலை) எண். 82 நாள்: 1.06.2009

திருவள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 18

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண். 221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறை, நாள். 20.11.1999.

படிக்க:

2. திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித ந.க. எண் .37020/ 2008 எம்1, நாள். 19.12.2008.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க எண். 11586/2009/எம்.2 நாள். 16.4.2009.

---

**ஆணை:**

திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் நகராட்சி அலுவலக வளாகத்தினுள் பேரறிஞர் அண்ணா அவர்களின் மார்பளவு பளிங்கு கல்லினால் செதுக்கப்பட்ட சிலையினை அமைக்க, திருவள்ளூர் நகர்மன்ற தலைவர் அவர்கள் அனுமதி கோரியுள்ளதாகவும், அச்சிலையினை, திருவள்ளூர் நகர திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் திரு.காமு.தயாநிதி, தொடர்ந்து பராமரிப்பதாக தெரிவித்துள்ளார் என்றும், அதற்கு திருவள்ளூர் நகர்மன்றமும் தனது தீர்மானம் எண்.133 நாள் 19.1.2007–ல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும் தெரிவித்து திருவள்ளூர் நகராட்சி ஆணையரின் கடிதத்துடன் சிலை நிறுவுவதற்கான வரைபடத்தினையும் அனுப்பியுள்ளார்.

2. திருவள்ளூர் சார் ஆட்சியர் தனது அறிக்கையில், திருவள்ளூர் நகராட்சி அலுவலகம், கிராம கணக்கில் நகர புல எண்.4—ல் 9200 சதுர மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது என்றும், சிலை அமைக்க உத்தேசித்துள்ள இடம் அலுவலக வளாக கட்டிடம் மற்றும் அலுவலக சுற்றுச்சுவருக்கு மத்தியில் அமைந்துள்ளது என்றும், அவ்விடத்தில் சிலை அமைக்க அனுமதி அளிப்பதனால் போக்குவரத்து மற்றும் சட்டம் ஒழுங்கு குறித்த பிரச்சினைகள் ஏதும் எழ வாய்ப்பில்லை என்றும், இப்பொருள் குறித்து திருவள்ளூர் நகராட்சியில் 19.1.2007 தேதியில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும், எனவே, திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களின் மார்பளவு பளிங்குச் சிலை நிறுவுவதற்கு அனுமதி வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

3. திருவள்ளூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனது அறிக்கையில், பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை பளிங்கு கல்லினால் செதுக்கப்பட்டுள்ளது என்றும் சிலை நிறுவுவதற்கு உரிய மேடை அமைக்கப்பட்டு போதிய இட வசதியும் செய்யப்பட்டுள்ளது என்றும் சிலை வைக்க அனுமதி கோரியுள்ள இடமானது பாதுகாப்பாக உள்ளதால் திருவள்ளூர் நகராட்சி அலுவலக வளாகத்தினுள் பேரறிஞர் அண்ணா அவர்களின் மார்பளவு திருவுருவ பளிங்கு சிலையினை அமைக்க எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும், திருவள்ளூர் மாவட்ட நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் அவர்களும் தனது அறிக்கையில், திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் நகராட்சி அலுவலக வளாகத்திற்குள் பேரறிஞர் அண்ணா அவர்களின் மார்பளவு பளிங்கு கல்லினால் ஆன சிலை வைக்க மேற்படி இடத்தை ஆய்வு செய்ததில், நகராட்சி அலுவலக வளாகத்திற்குள் சிலை அமைக்க உள்ளதாலும், மேற்படி, இடம் நெடுஞ்சாலைத் துறையின் எல்லைக்குள் இல்லை என்பதாலும், அத்துறையில் எதிர்கால தேவைக்கு இவ்விடம் தேவைப்படாது எனத் தெரிவித்துள்ளதாலும், மேற்படி சிலையை நிறுவ நெடுஞ்சாலைத் துறையும் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்துள்ளது. திருவள்ளூர் நகராட்சி அலுவலக வளாகத்திற்குள் பேரறிஞர் அண்ணா அவர்களின் மார்பளவு பளிங்கு கல்லினால் செதுக்கப்பட்ட சிலை வைக்க திருவள்ளூர் நகர்மன்றத் தலைவருக்கு அனுமதி அளிக்குமாறு திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. திருவள்ளூர் நகராட்சி நகர்மன்ற வளாகத்தில் நிறுவ அனுமதி கோரப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் மார்பளவு சிலை பளிங்கு கல்லினால் (Granite) செய்யப்பட்டு நிறுவ அனுமதி கோரப்பட்டதால், அரசாணை (நிலை) எண்.193 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 23.8.96—ன்படி வெண்கலத்தால் செய்யப்பட்ட சிலைகள் நிறுவ மட்டுமே அரசு அனுமதி அளிக்கப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ள நிலையில், மேற்கண்ட செயற்குறிப்பின் மீது நகராட்சி நிர்வாக இயக்குநரின் குறிப்பான பரிந்துரை கோரப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திருவள்ளூர் நகர்மன்றத் தலைவர் தனது சொந்த செலவில் வெண்கலத்தினாலான பேரறிஞர் அண்ணா அவர்களின் மார்பளவு வெண்கலத்தினாலான சிலையினை அமைக்க தற்பொழுது சம்மதக் கடிதம் கொடுத்துள்ளதாகத் திருவள்ளூர் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளதாகவும், மேற்படி சிலையினை நிறுவுவதற்கு திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையும்,

நெடுஞ்சாலைத் துறையின் ஆட்சேபணையின்மையும் பெறப்பட்டுள்ளதால் திருவள்ளூர் நகராட்சி அலுவலக வளாகத்தினுள் பேறறிஞர் அண்ணா அவர்களின் மார்பளவு வெண்கலத்தினாலான சிலையை நிறுவ அரசின் அனுமதி அளிக்குமாறு அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

5. நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அரசாணை (நிலை) எண்.221 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(நநி.5) துறை, நாள் 20.11.1998ல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளுக்குட்பட்டு, திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் நகர்மன்ற வளாகத்தில் பேறறிஞர் அண்ணாவின் வெண்கலத்திலான மார்பளவு சிலையினை நிறுவ திருவள்ளூர் நகர்மன்றத் தலைவருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை– 600 005.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர்.
நகராட்சி ஆணையர், திருவள்ளூர் நகராட்சி, திருவள்ளூர் மாவட்டம்.

**நகல்:**
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலர், சென்னை–600 009.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 005.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலரின் தனிச் செயலர்.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை–600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.